யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி
முதலாம் தவணைப் பரீட்சை – 2018
வணிகமும் கணக்கீட்டுக்கல்வியும்

தரம் - 10 நேரம் 2.00 மணி

சுட்டெண் - ..........................

## பகுதி – I

❖ எல்லா வினாக்களுக்கும் விடை தருக

• மிகச் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக

முருங்கன் கிராமத்தில் வசிக்கும் மக்கள் குடிநீர் பிரச்சனையை எதிர்நோக்குகின்றனர். இக்கிராம மக்கள் தமக்கு தேவையான குடிநீர் பெறுவதற்காக போத்தல்களில் அடைக்கப்பட்ட நீரை கொள்வனவு செய்ய பெருந்தொகை பணம் செலவு செய்ய வேண்டியுள்ளது. சில வறிய மக்கள் மழைநீரை சேகரித்தும் சிலர் மாசடைந்த குளத்து நீரை கொதிக்க வைத்து வடிகட்டி தமது தேவையை பூர்த்தி செய்கின்றனர். இந்நிலையில் அவர்களுக்கான நன்னீர் வழங்குவதற்கு நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை குழாய் நீர் விநியோனமுறையை செயற்படுத்த முன்வந்துள்ளது. இந் நடவடிக்கைக்கு தேவையான குழாய்களை (S- lon) எஸ்லோன் நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டது.

1. மேற்தரப்பட்ட நடவடிக்கை மூலம் பூர்த்தி செய்யப்படும் அடிப்படை மனித தேவை
1)உணவு 2) நீர் 3) சுகாதாரம் 4) போக்குவரத்து

2. போத்தல்களில் அடைக்கப்பட்ட நீரை மக்கள் கொள்வனவு செய்வது
1)தேவைகளில் ஒன்றாக அமையும்
2)மக்கள் வாழ்க்கைத்தரத்தை வெளிப்படுத்துவதாக அமையும்
3)ஆடம்பர செலவினங்களில் ஒன்றாக அமையும்
4)நீர் விநியோகத்திற்கான விளம்பரமாகும்.

3. நீர் வடிகாலமைப்புச் சபையானது (1) ................... துறையை சேர்ந்த (2) ............ நிறுவனமாகும்.
மேலே தரப்பட்ட கூற்றில் (1), (2) இடைவெளிகளில் இடம்பெறக்கூடிய சொற்களின் சரியான ஒழுங்கு
1)பொது, தனியாளுடமை 3) தனியார், கூட்டிணைக்கப்பட்ட கம்பனி
2)அரச, கூட்டுத்தாபன 4) தனியார், கூட்டுறவுச் சங்க

4. வரையறுக்கப்பட்ட எஸ்லோன் (S-lon Pvt)Ltd. நிறுவனம் எச்சட்டத்தின் கீழ் பதிவு செய்து கொள்ள வேண்டும்

1).1918ம் ஆண்டு 6ம் இலக்க வியாபாரப் பெயர்ப்பதிவு சட்டம்

2)1972ம் ஆண்டு 5ம் இலக்க கூட்டுறவுச்சட்டம்

3)1890ம் ஆண்டு பங்குடமை கட்டளைச் சட்டம்

4)2007ம் ஆண்டு 7ம் இலக்க கம்பனிச்சட்டம்

5. பின்வருவனவற்றுள் ஊழியர் நலனோம்பல்களுள் ஒன்றாக அமையாதது

1. உணவு குடிபானம் வழங்குதல்
2. வைத்தியக் காப்புறுதி வசதிகள்
3. போக்குவரத்து வசதிகள் வழங்குதல்
4. தங்குமிட வசதியின்மை

6. வணிகமொன்றினால் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திகளின் தன்மைக்கமைய வணிகங்களை வகைப்படுத்தும் ஒழுங்கு

1. தனியார்துறை , அரசதுறை
2. மொத்தவியாபாரம், சில்லறை வியாபாரம்
3. பொருளுற்பத்தி, சேவைஉற்பத்தி
4. சிற்றளவு வணிகங்கள், பாரியளவிலான வணிகங்கள்

7. அரசாங்கத்திடமிருந்து வணிகங்கள் எதிர்பார்க்கும் பங்களிப்புகளுள் ஒன்றாக அமைவது

1. உரிய நேரத்தில் மூலப்பொருட்களை வழங்குதல்
2. வணிக திட்டத்தை சரியாக செயற்படுத்தல்
3. வணிக செயற்பாடுகளை பரிசீலனை செய்தல்
4. குறைந்த வட்டி வீதத்தில் கடன் வழங்கல்

8. புதிய உற்பத்தி முறைமைகள் வணிக நிறுவனம் ஒன்றிற்கு

1. வாய்ப்பு 2) பலம் 3) பலவீனம் 4) அச்சுறுத்தல்

9. சனத்தொகை புள்ளிவிபர திணைக்களம் ஊழியர் எண்ணிக்கை 25ற்கும் குறைவாக காணப்படின் அவை

1. சிற்றளவு வணிகங்கள் 3) சிறிறய நடுத்தர அளவிலான வணிகங்கள்
2. நடுத்தர அளவிலான வணிகங்கள் 4) பாரியளவிலான வணிகங்கள்

Education கல்வி அධ්‍යාපන

10. பங்குடமையில் பங்காளர்கள் எண்ணிக்கை தொடர்பில் வரையறை செய்து செல்வாக்குச் செலுத்தும் சட்டம்

1. 1890ம் ஆண்டு பங்குடமை கட்டளைச் சட்டம்
2. 1918ம் ஆண்டு 6ம் இலக்க வியாபாரப் பெயர்ப்பதிவு கட்டளைச்சட்டம்
3. 1954ம் ஆண்டு 14ம் இலக்க கடை, காரியாலய ஊழியர் சட்டம்
4. 2007ம் ஆண்டு 7ம் இலக்க கம்பனிச்சட்டம்

11. சட்டரீதியான செயற்பாடுகளின் போது நிறுவன அதிகாரி தனது பதவிப் பெயரில் பிரசன்னமாக வேண்டி வணிக அமைப்பு

1. தனிவியாபாரம்
2. கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்
3) திணைக்களங்கள்
4) கூட்டுறவுச் சங்கம்

12. தனிவியாபார நிறுவனம் ஒன்று நிறுவனம் ஆரம்பித்து எத்தனை நாட்களுக்கு பதிவினை மேற்கொள்ள வேண்டும்

1. 7நாட்கள் 2) 21 நாட்கள் 3) 14 நாட்கள் 4) 90 நாட்கள்

13. வணிகத்துக்கு தேவையான நிதியினை ஈடுபத்தி அதன் இடர்களை பொறுப்பேற்பவர்கள்

1. முதலீட்டாளர்கள்
2. நிதிநிறுவனங்கள்
3) உரிமையாளர்கள்
4) ஊழியர்கள்

14. அரசால் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் சபை ஒன்றின் ஊடாக நிர்வகிக்கப்படுகின்ற அமைப்புக்களுள் ஒன்று

1. திணைக்களம்
2. கூட்டுத்தாபனம்
3) கம்பனி அமைப்புக்கள்
4) கூட்டுறவு

15. தனியாள் உரிமை வணிகமொன்றை பதிவு செய்து கொள்ள வேண்டிய இடம்

1. பிரதேச செயலகம்
2. மாவட்ட செயலகம்
3) கிராம உத்தியோகத்தர் காரியாலயம்
4) மாகாண சபை

16. இலங்கைப் போக்குவரத்து சபை பின்வரும் வணிக அமைப்புக்களுள் எவ்அமைப்பு வகையை சார்ந்தது

1. தனியாள் உடமை
3) கம்பனி



kalvi.lk

2. கூட்டுத்தாபனம்
4) கூட்டுறவு

17. கம்பனி அமைப்புக்கள் தமது மூலதனத்தைப் பெற்றுக் கொள்ளும் முறைமை
1. அங்கத்தவர்களிடமிருந்து பங்களிப்பு செய்யும் பணம்
2. அரசிடமிருந்து
3. பங்குகளை வெளியிடுவதன மூலம்
4. நிறுவன சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம்

18. இலங்கை தொழிற்சாலையொன்றின் உற்பத்திப் பொருட்களுக்கு உலகச் சந்தையில் கூடிய கேள்வி ஏற்பட்டுள்ளது. இந்நிலைமைக்கு காரணமாய் அமைந்த காரணி
1. பொருளாதார சூழல்
3) பூகோளச் சூழல்
2. சட்டச்சூழல்
4) கலாசாரச்சூழல்

19. பூகோளமயச் சூழலினால் ஏற்படும் சாதகமான விளைவு அல்லாதது
1. நவீன தொழில்நுட்பங்கள் பெற்றுக் கொள்ளல்
2. தரமான மூலப்பொருட்கள் பெறல்
3. அதிக போட்டித் தன்மைக்கு முகம் கொடுத்தல்
4. வினைத்திறன் கொண்ட இயந்திரங்களை பெற்றுக்கொள்ளல்

20. பின்வரும் காரணிகள் ஒவ்வொன்றும் உள்ளடங்கும் சூழல் காரணிகளின் சரியான ஒழுங்கு

| | |
|---|---|
| 1) அரசியல் சூழல் | A. பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை |
| 2) சட்டச்சூழல் | B. சர்வதேச தொடர்புகள் |
| 3) தொழில்நுட்ப சூழல் | C. உட்கட்டமைப்பு அபிவிருத்திகொள்கைகள் |
| 4) பொருளாதாரச்சூழல் | D. தொடர்பாடல், எண்மானம் |

1. 1 – C, 2 – A, 3 - D, 4 – B
3) 1 – A, 2 – B, 3 – D, 4 – C
2. 1 – C, 2 – A, 3 – B, 4 – D
4) 1 – D, 2 – C, 3 – A, 4 - B

(20 x 2 = 40 புள்ளிகள்)

## பகுதி – II

❖ எலலா வினாக்களுக்கும் விடை தருக.

01. .பின்வரும் பந்தியை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக

சுமங்கலி என்பவர் அழகுகலை ஒப்பனை அலங்காரம் பயிற்சி நெறிகளைப் பூர்த்தி செய்துள்ளார். அத்துடன் வார இறுதி நாட்களில் தொழிற்பயிற்சி அதிகார சபையினால் நடாத்தப்படுகின்ற உணவுத்தொழில்நுட்பமும், ஆடைகள் வடிவமைப்பும் கற்கை நெறியைத் தொடர்ந்துள்ளார். அழகுகலை ஒப்பனையில் மிகுந்த ஆர்வம் கொண்ட சுமங்கலி தனது வீட்டின் முன்புறம் அமைந்த பிரத்தியேக கட்டம் ஒன்றில் சுமங்கலி அழகுக்கலை நிலையம் எனும் பெயரில் ஒப்பனை தொழில்முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

இவரது அழகுக்கலை நிலையம் நகர்ப்புறத்தில் அமைந்திருந்ததோடு இவரது நிலயத்திலிருந்து சிறிது தூரத்தில் பல்கலைக்கழகம் அமைந்திருந்தது. இதனால் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா, கலைநிகழ்ச்சிகள், விழாக்களின் பொது பல்கலைக்கழக மாணவிகள் சுமங்கலியிடம் தாம் ஒப்பனை செய்வதை வழக்கமாக கொண்டிருந்தனர். அதுமட்டுமன்றி சுமங்கலியின் நேர்த்தியான ஒப்பனை முறையினால் திருமணவைபவங்களுக்கான ஒப்பனை செய்து கொள்ள பலர் முன்கூட்டியே பதிவுகளை மேற்கொண்டிருந்தனர். ஆயினும் ஒப்பனை செய்வதற்கான அடிப்படை வசதிகளை செய்து கொள்ளவும், அதற்கான ஒப்னைப் பொருட்களை கொள்வனவு செய்யவும் சுமங்கலியிடம் பணம் பற்றாக்குறையாக இருந்தது. இதனால் சுமங்கலி வங்கியிலிருந்து 500000.00 தொகையை 10% வட்டிக்கு கடனாகப் பெற்றுக்கொண்டார். ஒப்பனை செய்வோரில் சிலர் செயற்கையான ஒப்பனை பொருட்களை பயன்படுத்தாது இயற்கையான ஒப்பனை பொருட்கள் பயன்படுத்துவதையே பெரிதும் விரும்பினர். இதற்காக சுமங்கலி தனது வீட்டுத்தோட்டத்திலிருந்தே மூலிகைகள், மருதாணி போன்றவற்றைப் பெற்றுக்கொண்டதுடன் பப்பாளி, வெள்ளரி போன்ற பழவகைகளையும் அங்கிருந்து பெற்று ஒப்பனைக்கான பொருட்களை தயாரித்துக் கொண்டார். சுமங்கலி ஒப்பனை நிலையம் ஆரம்பித்து 3 மாத காலப்பகுதியினுள் அப்பிரதேசத்தில் வேறொரு ஒப்பனை நிலையம் செயற்பட



kalvi.lk

ஆரம்பித்ததும் சுமங்கலி சனி, ஞாயிறு வார இறுதி நாட்களில் தனது கற்கை நெறியை தொடர்வதற்காக அழகுக்கலை நிலையம் பூட்டப்பட்டிருப்பதனால் சுமங்கலியிடம் ஒப்பனை செய்து வந்த மாணவிகளில் சிலர் புதிய நிறுவனத்திற்குச் செல்ல ஆரம்பித்துள்ளனர்.

1) மேற் தரப்பட்ட சுமங்கலி அழகுக்கலை நிலையம் உற்பத்தியடிப்படையில் எவ்வணிக வகையைச் சார்ந்தது?

2) சுமங்கலியிடம் காணப்பட்ட பலம், பலவீனம் ஒவ்வொன்று வீதம் குறிப்பிடுக?

3) சுமங்கலியின் தொழில் முயற்சிக்கு காரணமாக அமைந்த காரணி?

4) அ) சுமங்கலி ஒப்பனை நிலையம் பதிவு செய்யப்பட வேண்டுமா?

ஆ) உமது விடைக்கான காரணத்தை நியாயப்படுத்துக?

5) உரிமையின் அடிப்படையில் வகைப்படுத்தும் போது மேற்படி வணிகம் எவ் அமைப்பைச் சேர்ந்தது?

6) இங்கு இனங்காணப்பட்ட புறச்சூழல் காரணிகளுள் உள்ளடங்கும் மூன்று தரப்பினரையும் அவற்றுக்கான உதாரணம் ஒவ்வொன்று வீதம் தருக?

7) சுமங்கலியின் முயற்சிக்கு அசசுறுத்தலாக அமைந்த 2 காரணிகளை குறிப்பிடுக?

8) சுமங்கலியின் அழகுக்கலை நிலையத்துடன் தொடர்புபட்ட வகையில் அமைந்த உற்பத்திக்காரணிகளுக்கான உதாரணங்களையும் குறிப்பிடுக?

9) மேற்தரப்பட்ட விடயத்தில் பொருளாதார சூழல் காரணியுள் உள்ளடங்கும் ஒரு மாறியினை குறிப்பிடுக?

10) மேற்தரப்பட்ட செயன்முறையில் காணப்படும் மூலதனத்திற்கு இரண்டு உதாரணங்கள் தருக

(10x 2 =20 புள்ளிகள்)

02. .

1) அ) வணிகம் என்பதனால் கருதப்படுவது யாது?

ஆ) வணிகத்தின் முதன்மை நிலை நோக்கங்கள் 2 தருக? (2 புள்ளிகள்)

2) பின்வரும் கூற்றுகள் உண்மையா பொய்யா எனக் குறிப்பிடுக?

அ) பண்டங்களுக்கு பண்டம் கைமாற்றம் செய்யப்பட்ட செயன்முறை வியாபாரம் எனப்படும்.

ஆ) தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி காரணமாக உலகம் இன்று பூகோள கிராமமம் எனும் நிலைக்கு மாற்றம் காணப்பட்டுள்ளது



kalvi.lk

இ) மனித தேவைகள் வரையறையற்றனவாகவும், விருப்பங்கள் வரையறுக்கப்பட்டனவாகவும் காணப்படுகின்றன.

ஈ) சில்லறை வியாபாரம் சேவை உற்பத்தி வணிக அமைப்பை சார்ந்ததாகும்.

(4 புள்ளிகள்)

3) தேவைகள், விருப்பங்களுக்கிடையான வேறுபாடுகளை குறிப்பிடுக

(2 புள்ளிகள்)

4) கட்டடம் கட்டும் ஒப்பந்த செயற்பாட்டில் ஈடுபட்டுவரும் பொறியியலாளராக பிறேம்குமார் தமது வேலைகளை வெற்றிகரமாக செயற்படுத்தும் பொருட்டு சிறந்த திட்டமிடல் மேற்கொள்ளும் சங்கரை முகாமையாளராக நியமித்ததுடன் கட்டப்பணிகளை செய்ய 100 கூலித் தெழிலாளிகளையும் 10 சுத்திகரிப்பு தொழிலாளர்களையும் நியமித்தார் இவ் ஒப்பந்த செயன்முறை தொடர்பான கணக்குகளை கணக்காளர் ராகவன் மேற்கொண்டார்.

மேற்தரப்பட்ட நடவடிக்கைகளில் காணப்படும் உழைப்பு எனும் உற்பத்தி காரணியை வகைப்படுத்திக் காட்டுக

(2 புள்ளிகள்)

03. .

1. அகச்சூழல் காரணிகளுள் உள்ளடங்கும் பிரிவனர்களைக் குறிப்பிடுக?

(2 புள்ளிகள்)

2. பின்வரும் கூற்றுக்கள் உண்மையா அல்லது பொய்யா எனக் குறிப்பிடுக

அ) தனது அறிவு, திறன் என்பவற்றைப் பயன்படுத்தி ஒப்படைக்கப்பட்ட கருமங்களைசரியான முறையில் நிறைவேற்றுபவர்கள் ஊழியர்கள் எனப்படுவர்

ஆ) பொருட்கள், சேவைகளின் பொது விலைமட்டங்கள் தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்லல் பணவீக்கமாகும்.

இ) பூகோளமய சூழலினால் ஏற்பட்ட சாதகவிளைவு அல்லாதது நாட்டினுள் வெளிநாட்டு மூலதனங்கள் உட்பாய்ச்சப்படுதலாகும்.

ஈ) அர்ப்பணிப்பற்ற ஊழியர் காணப்படுதல் நிறுவனமொன்றிற்கு பலமாக அமையும்

(4 புள்ளிகள்)

3. பூகோளமயமாதலின் பாதக விளைவுகள் 2 தருக?

(2 புள்ளிகள்)

4. வர்த்தக விருத்தியை நோக்கமாகக் கொண்டு நாட்டின் அதிவேக நெடுஞ்சாலைகளை அபிவிருத்தி செய்யும் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. வீதி அபிவிருத்தி அதிகார சபை இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றது.



kalvi.lk

அ) இச்செயற்பிட்டத்தின் மூலம் பூர்த்தி செய்யப்படும் அடிப்படை மனித தேவை யாது?

ஆ) இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் நிறுவனம் எவ் வணிக அமைப்பினுள் உள்ளடங்குகின்றது

(2 புள்ளிகள்)

04. .

1. வணிக அமைப்புக்களை உடமை அடிப்படையில் பாய்ச்சல் கோட்டு படத்தினூடாக காட்டுக?

(2 புள்ளிகள்)

2. பின்வரும் கூற்றுக்கள் உண்மையா பொய்யா எனக் குறிப்பிடுக

அ) அரசினால் மூலதனமிட்டு அரசுக்கு உடைமையாகவுள்ள வணிகங்கள் தனியார் துறை வணிகங்கள் ஆகும்.

ஆ) கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் தனியார்துறையைச் சேர்ந்த இலாபநோக்கற்ற நிறுவனங்களாகும்.

இ) கூட்டுறவுச் சங்கங்கள் அங்கத்துவ பணம் மூலம் தமது நிதியைத் திரட்டுகின்றன.

ஈ) வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அரச கூட்டுத்தாபன வகையைச் சேர்ந்தது

(4 புள்ளிகள்)

3. வணிக அமைப்புக்களை வகைப்படுத்தும் போது பயன்படுத்தப்படும் அளவு ரீதியான நியதிகள் 4 தருக?

(2 புள்ளிகள்)

4. சமீரும், ஹரீலும் பழங்களை கொள்வனவு செய்து விற்பனை செய்யும் பங்குடமைத் தொழிலில் ஈடுபடுகின்றனர் இருவருந் தலா 5000.00 ரூபாவை மூலதனமாக இட்டு தொழில் முயற்சியை ஆரம்பித்தனர்.

அ) இப்பங்குடமை அமைப்பில் காணப்படவேண்டிய பங்குடமை உறுதி யாது?

ஆ) இப்பங்குடமை உறுதி தொடர்பாக செல்வாக்குச் செலுத்தும் சட்டம் யாது?

(2 புள்ளிகள்)

05. .

1. வணிக நிறுவனத்தில் அக்கறை செலுத்தும் பின்வரும் தரப்பினரிடமிரந்து வணிகம் எதிர்பார்க்கும் பங்களிப்பு ஒவ்வொன்று வீதம் தருக

உரிமையாளர்

ஊழியர்கள்

2. பூகோளமயமாதல் என்றால் என்ன?

3. பின்வரும் நிறுவனங்களை ஒவ்வெரு நிறுவனத்திற்குரிய வணிக அமைப் வகைகளின் பெயர்களைக் குறிப்பிடுக?

அ) விவசாயக்கழகம்

ஆ) விவசாயகாப்புறுதிச் சபை

இ) இலங்கை தபால் நிலையம்

ஈ) சுந்தரம் ஸ்டோர்ஸ்

உ) சங்கரப்பிள்ளையும் மைந்தர்களும்

ஊ) வரையறுக்கப்பட்ட சாந்தி கம்பனி

எ) பாரதி வாணிபம்

ஏ) வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

4. கூட்டுறவு அமைப்பின் அனுகூலங்கள் 2 தருக?

5. இலங்கையில் சட்டசூழல் தொடர்பான சட்டதிட்டங்களை செயற்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் 2 தருக?

(10 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

*இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.*

*அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...*

Education கல்வி Kalvi.lk

Whatsapp
075 287 1457